[1994 மே 4

505—

கிருட்டிணகிரி தொகுதி, போதினாயனப்பள்ளிக்குப் பேருந்து வசதி ஏற்படுத்துதல்.

*24914—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருட்டிணகிரி தொகுதி, போதினாயனப் பள்ளிக்குப் போதிய பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே,

தற்போது அளிக்கப்பட்டுவரும் பேருந்து வசதியே அந்த கிராமத்திற்குப் போதுமானது.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பேருந்துகளை செலுத்திக் கொண்டிருக்கின்ற நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே நான் கேட்ட கேள்வியானது, மோதிரி னாயப்பள்ளி கிராமத்தின் வழியாகமோதிரினாயன பள்ளிக்கு பஸ் விட வேண்டுமென்று கேட்டேன், ஆனால் மாதிரி நாயனபள்ளிக்கு மாதிரின பள்ளி பேருந்து வந்திருக்கிறது. ஆகவே, அருகிலிருந்து போதினாயனப் பள்ளி கிராமத்திற்கு பேருந்து வசதி செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு ஏற்றாற்போல, அந்த வழித் தடங்களில் 3 நகரப் பேருந்துகள் 24 நடையும், புறவழி தட பேருந்துகள் 56 நடையும், தனியார் பேருந்துகள் 18 நடையும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதுவே போதுமான அளவு என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்றொரு கிராமத்தை சுட்டிக்காட்டி அந்தக் கிராமத்திற்கும் விடப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். சாலைகள் எப்படி இருக்கிறது என்பதையும், 30 கிலோ மீட்டருக்கு உள்ளே அடங்கியிருக்கிறதா என்பதையும் பரிசீலித்து அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

1994 மே 4]

முற்பகல் 10-15

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே சாலைகள் நல்லமுறையிலே இருக்கின்றன. ஏற்கெனவே ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டு, நிலுவையிலே இருக்கிறது. ஆகவே அந்த ஆய்வை வேகப்படுத்தி, உடனடியாகப் பேருந்து வசதி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்வை விரைவு படுத்த வேண்டிய அவசியமே இல்லை. 30 அல்லது 35 கிலோ மீட்டருக்குள்ளே அடங்கியிருக்குமானால், நகரப் பேருந்துகளை விரைவாகவே அங்கே இயக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 506, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

506—

மானாமதுரையில் உள்ள துணை கைத்தறி இயக்குநர் அலுவலகத்தைப் பரமக்குடிக்கு மாற்றுதல்.

*10948—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், மானாமதுரையில் உள்ள துணை கைத்தறி இயக்குநர் அலுவலகத்தை பரமக்குடிக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், மானாமதுரையிலிருந்த கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் அலுவலகம் பரமக்குடிக்கு மாற்றப்பட்டு விட்டது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மானாமதுரையில் இயங்கி வந்த துணை கைத்தறி இயக்குநர் அலுவலகத்தை அந்தப் பகுதியில், நெசவாளர்கள் அதிகமாக உள்ள பரமக்குடிக்கு மாற்றித்